# யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

# பழைய மாணவர் சங்கம்

*J/ Meesalai Veerasingam Central College*

# *Old Students Association*

# உப விதிகள்

## *By Lows*

# *யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பழையமாணவர் சங்கம்*

## *02.02.2014 அன்றிலிருந்து பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட*

# *உப விதிகள் (யாப்பு)*

***1. பெயரும் பணிமனையும் :-***

***அ)*** *இச்சங்கம் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பழையமாணவர் சங்கம்" என அழைக்கப்படும் (இனி இது இங்கே சங்கம் என்றே குறிக்கப்படும்)*

***ஆ)*** *இச்சங்கத்தின் பணிமனைகல்லூரி வளாகத்தில்அமைந்திருக்கும்.*

*2.* ***நோக்கங்கள்*** *:-*

*இச்சங்கத்தின் நோக்கங்கள் வருமாறு.*

***அ)*** *கல்லூரியின் சிறப்பியல்புகளையும் நலன்களையும் மேம்படுத்துதல்.*

***ஆ)*** *கல்லூரிக்கும் உறுப்பினர்களுக்குமிடையில் உணர்வுபூர்வமான நெருங்கிய உறவைப் பேணி வளர்த்தல்.*

***இ)*** *கல்லூரி/ பிரதேச மாணவர்களின் கல்வியை உச்சநிலைக்கு கொண்டுசெல்லல்.*

***3. உறுப்புரிமை:-***

***அ) தகுதி***

1. *கல்லூரியின் சகல பழைய மாணவர்களும் சகல ஆசிரியர்களும் (முன்னாள், இந்நாள்) சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்களாகச் சேர்ந்துகொள்ளத் தகுதியுடையோராவர்.*
2. *உறுப்புரிமைக்குத் தகுதியுடைய எந்தஉறுப்பினரும் உறுப்புரிமை விண்ணப்பக்கட்டணத்தை செலுத்தி உருப்பினராவர்.*
3. *சேரும் உறுப்பினர் ஆட்சிக்குழுவின் அங்கீகாரம் பெற்று ஆறு மாதங்களின் பின்னர் சங்கக்கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை பெற்றவராவார்.*

***ஆ)*** *உறுப்புரிமை மூன்று வகைப்படும். அதாவது*

1. *சாதாரணம்*
2. *ஆயுள்காலம்*
3. *கௌரவம்*

***இ) சாதாரண உறுப்புரிமை:***

1. *பிரிவு3 (அ) இல் கூறப்பட்ட தகுதியைக் கொண்டிருக்கும் அணைவரும் வருடாந்தம் உறுப்புரிமைக் கட்டணத்தை செலுத்தும் போது அவர் சாதரணஉறுப்பினராக கருதப்படுவார்.*



MVCCOSA

**ஈ) ஆயுள்கால உறுப்புரிமை**

1. 3 (அ) இல் கூறப்பட்ட தகுதியைக் கொண்டிருக்கும் அணைவரும் வருடாந்தம்உறுப்புரிமைக் கட்டணத்தின் 5 வருட உறுப்புரிமைக் கட்டணத்தை செலுத்தும் போது அவர் ஆயுள்கால உறுப்பினராக கருதப்படுவார்.

**உ) கௌரவ உறுப்புரிமை:-**

ஒருவர்கல்லூரிக்கு அல்லது சங்கத்திற்கு பெறுமதியான சேவையாற்றியிருப்பின் ஆட்சிக்குழுவின் விதப்புரையின் பேரில் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கௌரவ உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவார். கௌரவ உறுப்பினருக்குவாக்குரிமை இருக்காது.

**ஊ) உறுப்புரிமைக்கட்டணம்**

1. உறுப்புரிமை மற்றும் வருடாந்த உறுப்புரிமைக் கட்டணம் பொதுக்கூட்டத்தில் தீர்மாணிக்கப்படும்.
2. உறுப்புரிமைக் கட்டணம் எக்காரணத்தினைக்கொண்டும் பகுதியாகவோ முழுமையாகவோ மீளளிக்கப்படமாட்டாது.

**எ) உறுப்புரிமை மாற்றம்**

எக்காரணம்கொண்டும் உறுப்புரிமை மற்றொருவருக்கு மாற்றப்படலாகாது

**ஏ) உறுப்புரிமை இழத்தல்/ இரத்துச் செய்தல்**

இப்பிரிவில் குறிப்பிடப்பட்ட காரணங்களினால் ஒருவர் தனது உறுப்புரிமையை இழக்கலாம் அல்லது இரத்துச் செய்யப்படலாம்.

1. உறுப்புரிமைக் கட்டணம் செலுத்திபுதுப்பிக்கப்படாதுவிடின் உறுப்பினரின் உறுப்புரிமை குறித்த உறுப்புரிமை பெற்ற வருடத்தின் முடிவு திகதி நள்ளிரவுடன் காலாவதியாகிவிடும் அதன் பின்னான 30 நாட்களுக்கு உறுப்புரிமை புதுப்பிப்பதற்கான காலஅவகாசம் வழங்கப்படலாம். இக்காலத்தில் உறுப்புரிமைக்குரிய சகல உரிமைகளும் உண்டு.

2. உறுப்பினர் ஒருவர் எழுத்து மூலமாக செயலருக்கு அறிவிப்பதன் மூலம் சங்கத்தின் தனது உறுப்புரிமையில் இருந்து விலகிக்கொள்ளலாம். எனினும் குறித்த உறுப்பினரினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விளைவுகளினால் அவருக்குள்ள பொறுப்புகளில் இருந்து விலகுவதாக கொள்ளமுடியாது. அத்துடன் சங்கத்துக்கோ அல்லது உறுப்பினருக்கோ அவரால் செலுத்தப்படவேண்டிய நிலுவைகளில் இருந்தும் நீங்க முடியாது

**ஒ) உறுப்புரிமை வழங்கல்**

1. புதிய உறுப்புரிமை விண்ணப்பம் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் ஆட்சிக்குழுவுக்கு உண்டு.



MVCOSA

2. *உறுப்பினர் ஒருவரின் இரத்துச்செய்யப்பட்ட உறுப்புரிமையினை மீளவழங்கும் உரிமையினைஆட்சிக்குழு கொண்டிருக்கிறது.*

***4. ஆட்சிக்குழு :-***

*ஆட்சிக்குழுவே இச்சங்கத்தின் கட்டுப்பாட்டாளராகவும் சகல நடவடிக்கைகளையும் வழிநடத்தும் முகாமை செய்யும் குழுவாகவும் எந்த வகையிலேனும் சங்கத்துக்காக உருவாக்கப்பட்ட உபகுழுக்கள் நிர்வாகக்குழுக்கள் அலுவலர்கள் மற்றும் பணிக்குழுக்கள் போன்ற எந்த குழுக்களினதும் எல்லா உறுப்பினர்களினதும் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் குழுவாகவும் தொழிற்படும். அத்துடன் சங்கத்தின் சார்பான தொடர்பாடல்கள் செயற்பாடுகள் அனைத்திற்கும் பொறுப்புக்கூறும் சபையாகவும் இது இருக்கும். (இனி இது "ஆட்சிக்குழு" என்று அல்லது "குழு" என்று குறிக்கப்படும்).*

***அ) ஆட்சிக்குழு உறுப்பினர் எண்ணிக்கை:***

*ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்படும் அலுவலர்களுடன் மேலும் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களும் சேர்த்து மொத்தமாக 15 உறுப்பினர்களைக் கொண்டதாக ஆட்சிக்குழு அமையும்.*

***ஆ*** *குழுவின் எந்த உறுப்பினரும் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்குப் போதியமுன்னறிவித்தலின்றி வருகை தரத்தவறின் அவர் ஆட்சிக்குழுவின் உறுப்புரிமையை இழந்தவராகக் கருதப்படுவார்.*

***இ)*** *அடுத்து வரும்ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு முன்னர்குழுவில் ஏற்படும் அலுவலர் வெற்றிடத்தை நிரப்பும் அதிகாரத்தை ஆட்சிக்குழு கொண்டதாக அமையும்.*

***ஈ)*** *ஒரு குழுஉறுப்பினர் தனது பதவிக்காலத்தில் நடைபெற்ற மொத்த குழுக்கூட்டத்தில் 50% ஆன கூட்டங்களுக்கு சமூகமளிக்கத்தவறின் தொடர்ந்துவரும் பொதுக்கூட்டத்தில் நிர்வாகக்குழுவில் தெரிவு செய்யப்பட உரிமையற்றவராவார்.*

***உ) பதவிக்காலம்***

1. *குழுவின் பதவிக்காலம் அந்த குழுபதவிஏற்ற நாளிலிருந்து ஒரு வருடமாகும். அதுடன் ஒருவருடத்துக்கு நீடிக்கக் கூடிய தகமையைக் கொண்டிருக்கும். இருப்பினும் குழுவின்பதவிக்காலம் அடுத்த ஆண்டுப்பொதுக்கூட்டம் வரையில் வலுவுள்ளதாகும். புதிய நிர்வாகக்குழு தெரியப்பட்டதும் முன்னைய குழு கலைக்கப்பட்டதாகி விடும்.*

2. *தேவை நிமித்தம் நீடிக்கப்படவேண்டுமாயின் பொதுச்சபையின் விசேடகூட்டம் கூட்டப்பட்டுஅங்கே அதற்கான காரணங்கள் முன்வைக்கப்பட்டு பொதுச்சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நீடிக்கப்படலாம்.*



MVCOSA

***ஊ) ஆட்சிக்குழு உறுப்பினர் மற்றும் அலுவலர் பதவி விலகல் / இரத்துச் செய்தல்***

1. *குழுஉறுப்பினர்ஒருவர் 6 மாத காலம் இலங்கையில் வசிக்காதிருப்பின் தாமாகவே ஆட்சிக்குழுவிலிருந்து விலகியவராக கருதப்பட்டு அவருடைய இடம் ஆட்சிக்குழுவால் வெற்றிடமாக அறிவிக்கப்படும்.*
2. *ஆட்சிக்குழு உறுப்பினர் ஒருவர் தொடர்ச்சியாக மூன்று அறிவிக்கப்பட்ட செயற்குழுக்கூட்டங்களுக்கு சமூகமளிக்காதவிடத்து அவர் பதவி விலகியதாக கருதப்படும். அவருடைய இடம்வெற்றிடமாககருதப்பட்டு அவருடைய இடம் நிர்வாகக்குழுவினால் வெற்றிடமாக அறிவிக்கப்படும்.*
3. *விசேட கூட்டத்தில் அல்லது கூட்டமின்றி எழுத்து மூலம் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் பிரகாரம் பொதுச்சபையின் பெரும்பான்மை வாக்குகளால் ஆட்சிக்குழுஉறுப்பினர் ஒருவர் அல்லது ஆட்சிக்குழு பதவிக்காலத்திற்கு முன்பதாக பதவிஇரத்துச் செய்யப்படலாம்.*
4. *உறுப்பினர் எழுத்துமூலம் சங்கத்தின் நிர்வாகக்குழுவுக்கு அறிவிப்பதன் மூலம் தனது பதவியில் இருந்து விலகிக்கொள்ளலாம். .அந்த இடம்குழுவால் வெற்றிடமாக அறிவிக்கப்படலாம்.*

***எ) வெற்றிடம் நிரப்புதல்***

1. *வெற்றிடமாகிய குழுஉறுப்பினர் இடத்திற்கு புதிய குழுஉறுப்பினர் ஒருவரைநியமிக்கும் உரிமையினை ஆட்சிக்குழு கொண்டிருக்கும். அதற்கான தெரிவினை நேரடிக்கூட்டத்திலோ மேற்கொள்ளமுடியும்.*
2. *ஆட்சிக்குழு முற்றாகபதவி இழக்கும் போது விசேட பொதுக்கூட்டத்தின் மூலம் மட்டுமே புதிய ஆட்சிக்குழு தெரிவுசெய்யப்படலாம்*

***5. அலுவலர்கள்:-***

***அ)*** *சங்கத்தின் அலுவலர்கள் வருமாறு:*

*ஒரு தலைவர், ஒரு துணைத் தலைவர், ஒரு செயலாளர், ஒரு துணைச் செயலாளர், ஒரு பொருளாளர்.*

***ஆ)*** *தலைவர், ஒரு துணைத்தலைவர், செயலாளர்,துணைச்செயலாளர், பொருளாளர் சங்கத்தின்ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்படுவர்.*

***இ)*** *கல்லூரியின் அதிபர் சங்கத்தின் தலைவராவார்.*

***ஈ)*** *அலுவலர் தெரிவின் போது செயலாளர், பொருளாளர் பதவிக்கு ஒரு உறுப்பினர் தொடர்ந்துஅடுத்தடுத்து இரண்டு(2) தடவைக்கு மேலாக தெரிவு செய்யப்பட முடியாது.*

***உ)*** *துணைத் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளுக்கு தெரிவு செய்யப்படும் அலுவலர் முன்னைய ஆண்டு ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்.*



MVCOSA

**6. அலுவலரின் கடமைகள்:-**

**அ) தலைவர்**

1. சங்கத்தின் சகல பொதுக் கூட்டங்களுக்கும் ஆட்சிப்குழுக்கூட்டங்களுக்குத் தலைவர் தலைமை தாங்குவார்
2. கூட்டம் ஒன்றிற்குத் தலைவர் சமூகம் தராதவிடத்து துணைத்தலைவரைத் தலைமை தாங்கும் வண்ணம் குழு தெரிவு செய்யும்.

**ஆ) செயலாளர்:-**

ஆட்சிக்குழுவின் கட்டுப்பாட்டிற்கு ஏற்ப செயலாளர் பிரதம நிர்வாக அதிகாரியாவார். அவர் பின்வருவனவற்றின் பாதுகாப்பிற்கும் பராமரிப்பிற்கும் பொறுப்பாவார்.

1. ஒவ்வொரு உறுப்பினரதும் பெயர், முகவரி, தொழில் ஆகியவற்றை உள்ளடக்கிய உறுப்பினர் பதிவேடு.
2. சங்கத்தின் பொதுக்கூட்டங்களினதும், ஆட்சிக்குழுக்கூட்டங்களினதும் அறிக்கைகளை உள்ளடக்கிய குறிப்புப்புத்தகம்.
3. வருடாந்த அறிக்கைகள்
4. சங்கத்துடன் தொடர்புடைய ஏனைய ஆவணங்கள்.

**இ) பொருளாளர்:-**

1. சங்கத்திற்குச் சேர்மதியான சகல பணம், நிதி, ஆகியவற்றை ஏற்று சரியான முழுமையான கணக்கினை வைத்திருப்பதற்கும் ஆட்சிக்குழுவின் அங்கீகாரத்திற்கு ஏற்ப கொடுப்பனவுகளை மேற்கொள்வற்கும் தகுதி உடையவர்.
2. பொதுக்கூட்டத் திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன்பாக கணக்கு ஆய்வு செய்யப்பட்டு, கூட்டத்திற்கு 15 நாட்களுக்கு முன்பதாக ஆட்சிக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**7. கூட்டங்கள்:-**

**அ) ஆண்டுப் பொதுக்கூட்டம்**

ஆண்டுப் பொதுக்கூட்டம் சாதாரணமாக நிகழும். செயலரின்அறிக்கையும் பொருளரின்ஆய்விடப்பட்ட கணக்கறிக்கையும் இப்பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் தீர்மான முன்னறிவித்தல் கூட்டத்திகதிக்கு 14 நாட்களுக்கு முன்னர் செயலருக்குக் கிடைத்தல் வேண்டும். அதற்குப்பின்னர் கிடைக்கப் பெறும் அறிவுறுத்தல்களை ஏற்பது ஆட்சிக்குழுவின் முடிவாகும்.

**ஆ) செயற்குழு கூட்டம்**

1. அவசியம் ஏற்படும்போது செயலர் சுயவிருப்பத்தின் பிரகாரம் அல்லது கோரிக்கைப் பிரகாரம் அல்லது குழுவின் எட்டுக்கு (8) குறையாத உறுப்பினர்களின் கையெழுத்து



MVCOSA

*மூலமான கோரிக்கையின் பிரகாரம் குழுவின் கூட்டத்தைக் கூட்டுவார். குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அவ்வாறான கூட்டம்தொடர்பாக மூன்று நாள் முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.*

2. *முறையாகக் கூட்டப்பட்ட குழுவின்கூட்டத்திற்கான நிறைவேற்று எண்ணிக்கை எட்டு (8) ஆகும்.*

***இ) விசேட பொதுக்கூட்டம்:-***

*விசேட பொதுக்கூட்டம் ஒன்று செயலரால் ஆட்சிக்குழுவின் விதப்புரையின் பெயரில் அல்லது காரணம் குறித்து இருபதிற்குக் (20)குறையாத உறுப்பினர்கள் கையெழுத்திட்டு கோரிக்கைவிடுக்கும் போது கூட்டப்படும்.*

***உ)** முறைப்படிகூட்டப்படும் பொதுக்கூட்டத்திற்கு நிறைவேற்று எண்ணிக்கை முப்பது(30) ஆகும்.*

***ஊ)** எந்தப் பொதுக்கூட்டத்திற்கும் பதின்நான்கு நாள் முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.*

***8. நிதி :-***

*சங்கத்தின் நிதி, குழுவினால் தீர்மானிக்கப்படும். வங்கியில் அல்லது வங்கிகளால் சங்கத்தின் பெயரில் வைப்பில் அல்லது கணக்கில் இடப்படும். அத்தகைய வங்கிக்கணக்குகளை பொருளாளர், தலைவர் மற்றும் செயலளர் மூவரும் சேர்ந்து நடைமுறைப்படுத்துவர் . பொருளாளர் ரூபா 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொகையினை திரவப்பணமாக வைத்திருக்க முடியாது.*

***9. கணக்கு பரிசோதனை :-***

*ஆண்டுப் பொதுக்கூட்டத்தில்தெரிவு செய்யப்படும் கணக்குப் பரிசோதகர் சங்கத்தின் கணக்குகளைப் பரிசோதிப்பார்.*

***10. கிளைச் சங்கங்கள்:-***

*யாழ்ப்பாணமாவட்டத்திற்கு வெளியில்சங்கத்தின் அமைதியுடன் கிளைச்சங்கங்கள் தோற்றுவிக்கப்படலாம். ஒவ்வொருகிளைஅலுவலக ஆட்சிக்குழுவும் சங்கத்தின் பொதுக்கூட்டங்களில் பார்வையாளர்களாக கலந்து கொள்வதற்கு மூன்று பிரதிநிதிகளைப் பார்வையாளர்களாக அனுப்பிவைக்கலாம்.*

***11. உபகுழுக்கள்:***

*ஆட்சிக்குழுவின் தொழிற்பாடு, வேலைத்திட்டங்களை இலகுபடுத்துவதற்கான பல்வேறு பணிக்குழுக்கள், உபகுழுக்கள் உருவாக்கப்படலாம். உறுப்பினர்சபையில் இருந்தான உறுப்பினர்களை கொண்டு நியமிக்கப்பட்டு அவற்றுக்கு தொழிற்படுகால எல்லை வழங்கப்படலாம். இக்குழுக்களுக்கான தலைவரையும் ஆட்சிக்குழு நியமிக்கும் .இவ்வாறு நியமிக்கப்படும் குழுக்கள் மற்றும் உபகுழுக்கள் மீதானகட்டுப்பாடு அனைத்தும் ஆட்சிக்குழுவிடம் இருக்கும் அதேவேளை விதி 6 (ஆ) இல் உள்ள அலுவலர்கள் ஆட்சிக்குழுவுக்கும் உபகுழுக்களுக்கும் இடையிலான*



MVCOSA

ஒருங்கிணைப்பினை மேற்கொள்வார்கள்.

***12. விதிகளுக்கான திருத்தங்கள்***

*இந்தயாப்பின் எப்பகுதியையும் கூட்டத்தில் சிறப்புத் தீர்மானத்தின் மீது அன்றி மாற்றவோ திருத்தவோ முடியாது. அத்தகைய தீர்மானங்கள் கூட்டத்திற்குச் சமூகம் கொடுத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருத்தல் வேண்டும்.*

***13. அமைப்பு விதிகளுக்கு உட்படாத விடயங்கள்***

*இவ் அமைப்பு விதிகளுள் உள்ளடக்கப்படாத விடயங்களைப்பற்றித் தீர்மானிக்கும் அதிகாரம் குழுவுக்கு உண்டு. அத்தகைய தீர்மானங்கள் அடுத்துவரும் பொதுக்கூட்டத்தில் அங்கீகரிப்பதற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

MVCCOSA